உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 24.05.2026 • மலர் 04 • இதழ்: 144 • Edition : Nagercoil • 24.05.2026 • Vol : 04 • Issue : 144 • Page : 4 • Rs. 5/-

# பிரதமருடன் அமெரிக்க வெளியுறவு மந்திரியுடன் சந்திப்பு

புதுடெல்லி,மே. 24

இந்தியாவுக்கு 4 நாள் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவு துறையின் மந்திரி மார்கோ ரூபியோ டெல்லியில் பிரதமர் மோடியை இன்று நேரில் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது, மத்திய வெளிவிவகார மந்திரி ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் உள்ளிட்ட முக்கிய நபர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் முக்கிய தொழில்நுட்பங்கள் தொடர்பாக இந்தியா மற்றும் அமெரிக்காவின் உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக பிரதமர் மோடியுடன் ரூபியோ பேசினார். இது ஆக்கப்பூர்வ சந்திப்பாக இருந்தது என அமெரிக்க தூதர் கோர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுக்கு இந்திய முக்கிய தொரு கூட்டாளியாகும். இரு நாடுகளும் தடையற்ற மற்றும் வெளிப்படையான இந்தோபசிபிக்கை நோக்கி தொடர்ந்து முன்னேறுகிறது என்றும் அவர் சுட்டி காட்டினார்.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக, முதலில், கொல்கத்தாவில் உள்ள அன்னை தெரசா நிறுவிய கருணை பணியாளர் அமைப்பின் தலைமையகத்திற்கு சென்று அவர் பார்வையிட்டார். இதன் பின்னர், கொல்கத்தாவின் புகழ்பெற்ற விக்டோரியா நினைவகத்திற்கும் சென்றார்.

அமெரிக்க வெளியுறவு மந்திரியாக பதவியேற்ற பின்பு மார்கோ ரூபியோ இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும். அவர், ஆக்ரா மற்றும் ஜெய்ப்பூர் நகரங்களுக்கும் செல்ல திட்டமிட்டு உள்ளார். டெல்லியில் வருகிற 26ந்தேதி நடைபெறும் குவாட் கூட்டமைப்பு நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் கூட்டத்திலும் அவர் பங்கேற்கிறார்.



# முதுகில் குத்திய காங்கிரஸ் கட்சிக்கு கண்டனம்: தி.மு.க. இளைஞர் அணி கூட்டத்தில் தீர்மானம்

சென்னை, மே. 24

தி.மு.க இளைஞர் அணியின் மாவட்ட மாநகர மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:

★ நடந்துமுடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. மீதும், கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் மீதும் நம்பிக்கை வைத்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்த 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

★2026சட்டமன்றத்தேர்தலில்,கொள்கை உறுதியோடு மதச்சார்பின்மை சக்திகளை ஒன்றிணைத்து ‘மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை’ உருவாக்கி, தேர்தல் களத்தில் நம்மையெல்லாம் வழிநடத்தி, முதன்மை தொண்டராய் ஓய்வில்லாமல் உழைத்து, 73 சட்டமன்றத் தொகுதிகளில் நம் கழகக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற முதன்மை காரணமாக விளங்கிய நம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு இந்த கூட்டம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

★ தேர்தல் களத்தில் தி.மு.க. வெற்றி வாய்ப்பை இழந்ததற்கான காரணத்தைக் கண்டறிய கழக நிர்வாகிகள் உடன்பிறப்புகள் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துகளையும் கேட்டறிய இணையதளம் ஒன்றை துவக்கியதோடு, தொகுதிதோறும் சென்று நேரடியாக அனைவரையும் சந்திக்கவும் ஆய்வுக்குழுவை நியமித்திருக்கிறார்

நம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின். அவரது இந்த முன்னெடுப்புகளுக்கு நன்றி தெரிவிப்பதோடு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மேற்கொள்ளவிருக்கும் அனைத்துவகை மறுசீரமைப்பிற்கும் கழக இளைஞர் அணி துணை நிற்பதோடு, வரும் காலங்களில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்

இடும் கட்டளைகளை பணிகளை தொய்வின்றி நிறைவேற்றி, கழகப் பணியை மென்மேலும் வீரியத்துடன் மேற்கொள்ள உறுதியேற்கிறோம்.

★ கடந்த பல தேர்தல்களிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் போட்டியிட்டுப் பல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றது காங்கிரஸ். அவர்கள் கட்சியில் இருப்பவர்களை வைத்து களப்பணி செய்யாத நிலையிலும் காங்கிரஸ் வெற்றிபெறக் காரணம் தி.மு.க. தொண்டர்கள்தான் என்பதை யாருமே மறுக்க முடியாது. மறைக்க முடியாது.



நடந்து முடிந்த தேர்தலிலும் தி.மு.க.வினரின் உழைப்பினால் 5 சட்டமன்ற உறுப்பினர்களை வென்றனர். தேசிய கட்சியாக இருந்துகொண்டு தேர்தலுக்கு முன்பாகவே மாநிலக் கட்சியான தி.மு.க. உறுப்பினர்களின் வாக்குகளால் மாநிலங்களவை உறுப்பினர் பதவியையும் பெற்றனர்.

இத்தனையும் பெற்றுக் கொண்டு, ஒரு நன்றி கூட சொல்லாமல், நன்றி உணர்ச்சியும் இல்லாமல் ஒரே இரவில் அணி மாறிச் சென்றிருக்கின்றனர். பழம்பெரும் பேரியக்கம் அரசியலின் அடிப்படை நாகரிகத்தைக் கூட கடைப்பிடிக்க முடியாத அளவுக்கு, பதவி ஆசை அவர்களின் மூளையை மழுங்கடித்துவிட்டது.

அடுத்தவர் உழைப்பில் ஒட்டுண்ணியாய் உண்டு கொழுப்பதும், தன் தேவைக்கேற்ப கொள்கை மறந்து துரோகம் புரிவதும் காங்கிரசுக்குப் புதிதில்லைதான். இன்று நமக்குச் செய்த துரோகத்தை, நாளை பதவி கொடுத்த புதிய கூட்டாளிக்கும் செய்வார்கள். பயணிக்கும் படகிலேயே ஓட்டை போடும் அறிவாளிகள்தான் காங்கிரஸ் கட்சியினர்.

தி.மு.க. ஆட்சியமைக்க வேண்டும் என விரும்பிய மக்களின் வாக்குகளால்தான் இன்று அவர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளார்களேதவிர, இது அவர்கள்தங்கள் சொந்தச் செல்வாக்கினால் பெற்ற வெற்றியல்ல என்பதைக்கூட உணராமல், வரலாறு படைத்துவிட்டதாக உளறுகிறார்கள்.

சொந்த உழைப்பில் ஒருநாளும் வெற்றி பெற முடியாமல், நம்பியவர்களுக்கெல்லாம் துரோகமிழைக்கும் அறமில்லாத காங்கிரஸ் கட்சிக்கு இந்தக் கூட்டம் தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

★ பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட அனைவரது பாதுகாப்பையும் உறுதி செய்திட பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்த தி.மு.க. அரசு மீது விஷமப் பிரசாரங்கள் மற்றும் பொய்ப் பிரச்சாரங்கள் செய்து, சேற்றை வாரி வீசியவர்கள் இன்றைக்கு ஆட்சியில் அமர்ந்திருக்கிறார்கள்.

இவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் எங்கு பார்த்தாலும் கொலை கொள்ளை பாலியல் வன்கொடுமை போன்ற குற்றச்செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. கோவையில் 10 வயது சிறுமி கடத்தி காட்டுமிராண்டித்தனமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

புதுக்கோட்டையில் நீதிமன்றத்தில் ஆஜராக வந்த சிறுவன் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளான். வந்தவாசியில், ஓடும் லாரியில் 14 வயது சிறுமி கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளார்.

படப்பை அருகே இரட்டைக் கொலை. தூத்துக்குடியில் மது தகராறில் கொலை. சேலத்தில் மாணவர் அடித்துக் கொலை. மணலி புதுநகர் பகுதியில் பிரசாந்த் என்பவர் வெட்டி படுகொலை. விச்சூர் கிராமத்தைச் சேர்ந்த 21 வயதான இளைஞர் ஓட ஓட விரட்டிக் கொலை எனக் குற்றப் பட்டியல் நீள்கிறது.

பொறுப்பேற்ற 13 நாட்களிலேயே முப்பதுக்கும் மேற்பட்ட கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நிகழ்ந்து தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு தறிகெட்ட செய்திகள் வருகின்றன.

ஆனால், முதல்அமைச்சர் கோட்டைக் கழற்றினார்,

கூலிங் கிளாஸ் போட்டார், பொலிரோ கார் ஓட்டிப் பார்த்தார், பேட்டரி காரில் பவனி வந்தார் என்ற ரீல்ஸ்களால் இவற்றைத் திசை திருப்ப பார்க்கிறார்கள்.

இந்த வெற்று விளம்பர நடவடிக்கைகளுக்குப் பதிலாக முதல்அமைச்சர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து மக்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும் எனவும், ரீல் ஆட்சியை நிறுத்தி, ரியல் நிர்வாகத்தை வழங்க வேண்டும் எனவும் தி.மு.க. இளைஞர் அணியின் நிர்வாகிகள் கூட்டம் வலியுறுத்துகிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# த.வெ.க. ஆட்சியிலும் குழந்தைகள், பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது: சீமான்

சென்னை, மே. 24

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் அருகே கண்ணம்பாளையம் பகுதியில் தனது வீட்டின் அருகே விளையாடி கொண்டிருந்த பத்து வயது சிறுமி கடத்திச்செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட செய்தியறிந்து பேரதிர்ச்சி அடைந்தேன். ஒரு பச்சிளம் பிள்ளை கொடூரமாக துன்புறுத்தப்பட்டு, கொல்லப்பட்டிருப்பது நெஞ்சத்தைப் பதைபதைக்கச் செய்கிறது. ஆற்ற முடியா பேரிழப்பைச் சந்தித்து நிற்கும் பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் என்னுடைய ஆறுதலைத் தெரிவித்து, துயரத்தில் பங்கெடுக்கிறேன்.

ஆட்சி மாறினாலும், காட்சிகள் மாறவில்லை என்பது போல, த.வெ.க.வின் ஆட்சியிலும் குழந்தைகள், பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருப்பது வெட்கக்கேடானது. பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும், தனியுரிமையையும் உறுதிசெய்ய முடியாத ஒரு நாடு நாடல்ல; அது சுடுகாடு.

தொடரும் பாலியல் வன்கொடுமைகளும், பெண்களுக்கு எதிரான குற்றங்களும் இச்சமூகம் குற்றச்சமூகமாக மாறிவிட்ட பேராபத்துக்கான அறிகுறியாகும். ஒட்டுமொத்தச் சமூகமும் வெட்கித் தலைகுனிய வேண்டிய பேரவலம் இது. இதற்குக் குற்றங்கள் நடந்தேறிவிட்டப் பின்னர், குற்றவாளிகளைக் கண்டறிந்து கைதுசெய்வது மட்டும் போதாது; குற்றங்கள் நடைபெறுவதற்கு முன்பே, முன்னுணர்ந்து தடுக்கக் குற்றத்தடுப்புக் காவல்துறையும் அமைக்கப்பட வேண்டும்.

எவ்விதக் கொடூரக் குற்றத்தையும் செய்வதற்குரிய குரூரச்சிந்தனையையும், துணிவையும் தரும் போதைப்பொருட்களின் புழக்கத்தையும், பரவலையும் முற்றாக ஒழிக்க வேண்டும். இனியொரு சிறுமியோ, பெண்ணோ ஒருபோதும் பலியாகக்கூடாது. ஆகவே, சிறுமியின் படுகொலைக்கு காரணமான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்குக் கடும் தண்டனைக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமெனவும், சிறுமியின் குடும்பத்தினருக்கு ரூ.50 லட்சம் துயர்துடைப்புத்தொகை வழங்க வேண்டுமெனவும் ஆளும் த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்: பிரேமலதா விஜயகாந்த்

சென்னை, மே. 24

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

திருச்சி புத்தூர்பகுதியில்உள்ளமகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த செவிலியர் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி சீதாலட்சுமி (19 வயது) தவறான மற்றும் அளவுக்கு அதிகமான மயக்க மருந்து செலுத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவத்தில் உயிரிழந்தது மிகுந்த அதிர்ச்சியும், அறுவை சிகிச்சை வேதனையும் அளிக்கிறது. மருத்துவ துறையில் கடைபிடிக்க வேண்டிய அடிப்படை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மருத்துவ நடைமுறைகள் சரியாக பின்பற்றப்படாததே இந்த இளம் மாணவியின் உயிரிழப்பிற்கு காரணம் என சகமாணவிகள், பொதுமக்கள் மற்றும் உறவினர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். இந்த சம்பவம் அரசு மருத்துவமனைகளின் செயல்பாடு மற்றும் நோயாளி பாதுகாப்பு குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

உயிரிழந்த மாணவி சீதாலட்சுமியின் குடும்பத்தினருக்கும், சக மாணவிகளுக்கும் தேமுதிக சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவியின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். மேலும், இந்த சம்பவத்திற்கு காரணமான மருத்துவர்கள் மற்றும் தொடர்புடைய அதிகாரிகள் மீது உடனடி மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடத்தி, சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன், மருத்துவமனைகளில் நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான கண்காணிப்பு மற்றும் மருத்துவ தரநிலைகளை தமிழக அரசு உடனடியாக பலப்படுத்த வேண்டும். மேலும் இனி இதுபோன்ற துயர சம்பவங்கள் நடைபெறாத வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதையும் தேமுதிக சார்பாக வலியுறுத்துகிறோம். "மருத்துவம் பயிலும் செவிலியருக்கே இந்த நிலை என்றால், சாதாரண மக்களின் நிலை என்ன?" என்ற கேள்விக்குறி அனைவரின் மனதிலும் எழுகிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

### மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில்

# அமைச்சர் செங்கோட்டையன் தலைமையில் ஆய்வு கூட்டம்




சென்னை, மே 24,

சென்னை சேப்பாக்கத்தில் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் மழைக்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டது. இந்த ஆலோசனைக்கூட்டத்தில்இத்துறையின்முதன்மை செயலாளர் முருகானந்தம், உள்ளிட்ட துறை ரீதியிலான நிர்வாகிகள் பங்கேற்றனர்.

அதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், வெப்பநிலை மாற்றங்கள் குறித்து ஆலோசனை நடத்தியதாகவும், மக்களுக்கு அறிவுரை வழங்குவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

மேலும் பருவ மழை தொடங்க உள்ள நிலையில் அவற்றை எதிர்கொள்வது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதாகவும் வருவாய்த் துறை சார்பாக அனைவரும் இணைந்து பணிகளை மேற்கொள்ள உள்ளதாக கூறிய அமைச்சர், அனைவரும் பாராட்டும் வகையில் துறையை எடுத்துச் செல்ல உள்ளதாக தெரிவித்தார்.




# தேசிய காச நோய் கண்டறிதல் ஒழிப்பு முகாம்!

ஆறுகாணி மே. 24

தேசிய காசநோய் கண்டறிதல் ஒழுப்பு திட்டத்தின் கீழ் நிக்ஷய் ஷிவிர் 100 நாள் நோய் கண்டறியும் முகாம் மற்றும் விழிப்புணர்வு ஆறுகாணி துணை சுகாதார நிலையத்தில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் சித்த மருத்துவர் Dr. சுகன்யா காசநோய் குறித்தும், அதன் தாக்கங்கள், நோயின் ஆரம்ப அறிகுறிகள், நோய் கண்டறிந்த பின் சிகிச்சைகள் பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கினார். இம்முகாமில் ஊர் மக்கள் கலந்து கொண்டு மருத்துவரின் ஆலோசனைகளை கேட்டறிந்தனர். பின்னர் முகாமில் கலந்து கொண்ட மக்களுக்கு நிலவேம்பு கசாயம் ,மற்றும் பொடி வழங்கினார். இம்முகாமில் வார்டு கவுன்சிலர் பெமினா, பல் நோக்கு பணியாளர் அருள் ,புனித குமாரி, மற்றும் சுகாதார செவிலியர்கள், டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



### ஊத்தங்கரை அருகே உள்ள

# காரப்பட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி மாணவ, மாணவிகளின் வசதிக்காக ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் வசதி செய்து கொடுத்த காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர்

கிருஷ்ணகிரி, மே. 24

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே உள்ள காரப்பட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி மாணவ, மாணவிகளின் வசதிக்காக ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் வசதி செய்து கொடுத்த காங்கிரஸ் பொதுக் குழு உறுப்பினர் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை உள்ள காரப்பட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்குமாறு பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுக்க ப் பட்டது. இதனையடுத்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமான எல், சுப்பிமணியன் தனது சொந்த நிதியில் இருந்து காரப்பட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளின் தாகத்தினை தீர்க்கும் வகையில் ஆழ்த்துளைகிணறு அமைத்து கொடுத்துள்ளார். சிறப்பாக பள்ளிக்கு ஆழத்துளை கிணறு அமைத்து கொடுத்த காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினரின் தியாகத்தினை போற்றும் விதமாக காரப்பட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி ஆசிரியர் அருண் மற்றும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் பொரு ளாளர் பெருமாள் மற்றும் அந்தப் பள்ளியில் பயின்று வரும் குழந்தைகளின் பெற்றோர்கள் ஊர் பொதுமக்கள் அனைவரும் பள்ளியின் சார்பில் நன்றியினை தெரிவித்து கொண்டனர்.

# திருச்சி: லாரிக்கு அடியில் சிக்கிய பைக்



திருச்சி, மே. 24

திருச்சி உறையூர் புத்தூர் சாலையில் லாரி ஒன்று பைக் மீது மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் பைக் லாரியின் அடியில் சிக்கியதுடன், பைக்கில் சென்ற இளைஞர் தலையில் பலத்த காயமடைந்து ரத்தம் வழிந்த நிலையில், அவரை பொதுமக்கள் மீட்டு டனடியாகமருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து அரசு மருத்துவமனை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தேனி மாவட்ட கலெக்டர் விடுத்த தகவல்




தேனி, மே. 24

தேனி மாவட்டம் பெரியகுளம், மற்றும் ஆண்டிபட்டி, வட்டங்களில் உள்ள வைகை அணை உபகோட்டம், வைகை அணை கட்டுப்பாட்டில் உள்ள ஆண்டிபட்டி வட்டத்தில் 3, பெரியகுளம் வட்டத்தில் 3, ஆக மொத்தம் 6 அரசுபுறம்போக்குவைகைஅணைநீர்த்தேக்கத்தில் விவசாய நிலங்களுக்கு தேவைப்படும் களிமண் மற்றும் வண்டல் மண் ஆகியவற்றை விவசாயிகள் மற்றும்மண்பாண்டதொழிலாளர்கள்இலவசமாக எடுத்துக் கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது (அரசாணை எண்.14, இயற்கை வளங்கள் (எம்.எம்.சி.1) துறை, நாள்:12.06.2024ன்படி தேனி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீட்டு எண்.10. நாள்:12.05.2026) மண்பாண்ட பயன்பாட்டிற்காக களிமண் எடுக்க வரப்பெறும் விண்ணப்பங்களில் உண்மைத்தன்மை குறித்து சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் சான்று, இருப்பிடச்சான்று ஆகியன சரிபார்த்து, வைகை அணை நீர்த்தேக்கத்தில் இலவசமாக எடுத்துக் கொள்ள tnesevai.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக சம்மந்தப்பட்ட வட்டாட்சியரிடம் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.

### கரூர் அருகே

# விவசாயி மீது துப்பாக்கி சூடு; 3 பேரிடம் விசாரணை

கரூர், மே. 24

கரூர் மாவட்டம் கடவூர் வட்டம் தரகம்பட்டி, வலையபட்டி சேர்ந்த கருணகிரி(50) என்பவர் நள்ளிரவில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்கள் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டதில் அருணகிரி படுகாயம் அடைந்தார்.

இதனைத் தொடர்ந்து கடவூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விவசாயி முதுகில் நாட்டுத்துப்பாக்கியால் சுடப்பட்ட விவகாரத்தில்,அவரது தோட்டத்துக்கு அருகே 3 பேரை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். முன்விரோதம் காரணமாக விவசாயி மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதா என்றகோணத்தில்போலீசார்தீவிரவிசாரணையில் நடத்தி வருகின்றனர்.



# மக்களுக்கு நன்றி தெரிவித்த சட்டமன்ற உறுப்பினர்

அருமனை , மே 24

விளவங்கோடு தொகுயில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் பிரவீன் அவர்கள் ஆறுகாணி, பத்துகாணி, அணைமுகம், ஒருநூறாம்வயல், கற்றுவா, மருதம் பாறை செண்பகதரசு மற்றும் களியல் சுற்றுவட்டார பகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்து சுற்றுப்பயணம் மேற்கொண்டார். மேலும் பல இடங்களில் மக்கள் கோரிக்கை மனுக்களை வாங்கினர். மனுக்களை பெற்ற எம்.எல்.ஏ, கோரிக்கைகளை பரிசீலித்து நடைமுறைப்படுத்துவோம் என கூறினார்

# அரசியல் நாகரிகம் தெரியாத அண்ணாமலை தவெக அரசை விமர்சிப்பதா?

### காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் கணபதி சிவக்குமார் பதிலடி



கோவை மே:24

காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் கணபதி சிவக்குமார் விடு த்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதா வது,

பாஜக முன்னாள் மாநிலத் தலைவரும்,தேசிய பொதுக் குழு உறுப்பினருமான அண்ணாமலை சூலூரில் சிறுமி கடத்தி,கொலை செய்யப் பட்ட சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.அது ஜனநாயக அடிப்படையில் கண்டிக்கும் உரிமை கொண்ட விசயம் தான்.

ஆனால் அதற்கு அண்ணாமலை முன்வைக்கும் விசயங்கள் அவரைக் க ண் டி க க த் த க் க வை ! அ ண் ணா மலை,திமுக ஆட்சியில் நிலவியது போலவே பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் தொடர்வதாக தெரிவித்துள்ளார்.தன் அரசியல் லாபத்திற்காகவும்,இழந்துபோன தன் செல்வாக்கை மீட்டு, எடுப்பதற்காக அண்ணாமலை இப்படி கருத்து தெரிவித்துள்ளார்.

மத்தியில் பாஜக அரசு ஆட்சிக்கு வந்து முழுதாக 12 ஆண்டுகள் கடந்து விட்டன.ஆனால் பிரச்னைகளின் போதெல்லாம்,முந்தைய காங்கிரஸ் அரசு தான் காரணம் எனச் சொல்லி,அதன் பின்னால் தன் தவறுகளை மறைத்துக் கொள்ளத்துடிப்பது பாஜகவின் வழக்கம், ஆட்சிக்கு வந்த 12 ஆண்டுகளிலும் பல வரலாற்றுத் தவறுகளையும், மக்களுக்கு விரோத செயல்பாடுகளையும் செய்துவரும் பாஜக அரசு அதற்கு ஒரு முறைகூட பொறுப்பேற்றது இல்லை.

ஆனால் ஆட்சிக்கு வந்த இரண்டே வாரங்களில் தவெகவை,முந்தைய திமுக அரசுடன் அண்ணாமலை ஒப்பிட்டுப் பேசுவது எப்படி சரியாக இருக்கும்?

ஆட்சிக்கு வந்த உடன்,முதல்வர் விஜய் மூன்று கோப்புகளில் கையெழுத்திட்டார்.சூலூர் விவகாரத்தைப் பொறுத்தவரை சிறுமி கொலை வழக்கில் தொடர்புடையவர்களை கைது செய்யப்பட்டுள்ளனர்.இது அண்ணாமலைக்கு தெரியாதா?அல்லது தெரிந்தும்,தெரியாததுபோல் இருக்கிறாரா?

தவெக அரசும்,அதன் முதல்வர் விஜய் எப்போதுமே மக்கள் பணி செய்வதிலேயே கவனம் செலுத்தி வரும் நிலையில் தமிழகத்தில் துடைத்தெறியப்பட்டு இருக்கும் பாஜகவினர் வெற்று வாய்ச்சவடால் பேசும் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று கூறினார்.




# சென்னை, மற்றும் காமராஜர் துறைமுகம் 2025-26க்கான நிதிநிலை அறிவிப்பு

சென்னை, மே24

சென்னை ராஜாஜி சாலையில் உள்ள சென்னைதுறைமுக ஆணையரகத்தில் அதன் தலைவர் விஸ்வநாதன் மற்றும் காமராஜர் துறைமுக நிறுவனத்தின் தலைவர் ஐரீன் சிந்தியா ஆகியோர் இணைந்து சென்னை துறைமு கங்களின் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்தனர்

அதில் பேசிய அவர்கள், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக நிறுவனம் இணைத்து கடந்த ஆண்டு 107 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை கையாண்டுள்ளது. அதில் 57.9 மில்லியன் மெட்ரிக் டன் சென்னை துறைமுகமும் 49.08 மில்லியன் மெட்ரிக் டன் காமராஜர் துறைமுகமும் கையாண்டுள்ளது என்று தெரிவித்தனர்

சென்னை துறைமுக ஆணையத்தில் கண்டெய்னர் கையாள்வது பொறுத்தவரை 6.7% கார்கள் ஏற்றுமதி 11.5% உயர்ந்துள்ளது.கச்சா எண்ணெய் கையாள்வது 11% அதிகரித்துள்ளது . காமராஜர் துறைமுக நிறுவனத்தில் கார்கள் ஏற்றுமதி கையாள்வது 18.8% அ தி க ரி த் து ள் ள த ா க வு ம் , மேலும் சென்னை மற்றும் காமராஜர் துறைமுகங்களில் இருந்து ஒவ்வொரு 80 வினாடிக்கும் ஒரு கார் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

கடந்த 5 ஆண்டுகளில் வருவாய் நிலையான வளர்ச்சியுடன் கடந்த ஆண்டு சென்னை துறைமுகம் மற்றும் காமராஜர்துறைமுகம் இணைந்து 2400 கோடி வருமானம் ஈட்டியுள்ளதாகவும் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத வகையில் சென்னை துறைமுகம் சிறப்பான செயல்பட்டு 55.14% விகிதத்தை பெற்றுள்ளது .

காமராஜர் துறைமுகத்தை பொறுத்தவரை வரி வருவாய் ஒதுக்கீடுக்கு முன் முதல் முறையாக ஆயிரம் கோடியை தாண்டி 1071.63 கோடியாக உள்ளது என தெரிவித்தனர் .

தருமபுரி மாவட்டத்தில்

# குற்ற செயல்களில் ஈடுபட்ட ரவுடிகள் கைது

தருமபுரி மே 24

தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன் உத்தரவின்படி காவல் துறையினர் மாவட்ட முழுவதும் குற்ற செயல்களில் ஈடுபட்ட ரவுடிகள், பொது மக்களின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படுபவர்களை கண்காணிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இதன்படி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்கு மிரட்டல் விடுத்தவர்கள், பொது இடங்களில் தகராறில் ஈடுபட்டவர்கள் என மொத்தம் 18 ரவுடிகளை காவல்துறையினர் கைது செய்தனர்.

மாவட்டத்தில் திருட்டு, வழிப்பறி, போதை பொருட்கள் கடத்தல் உள்பட பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறையினர் எச்சரித்துள்ளனர்.



திருச்சி

# தவறான சிகிச்சையால் நர்சிங் மாணவி பலி

புதுக்கோட்டை, மே. 24

புதுக்கோட்டை மாவட்டம் மணக்குடிபட்டிகிராமத்தைச்சேர்ந்தசெவிலியர் மாணவி சீதாலட்சுமி (19) திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மூக்கில் சதை வளர்ச்சி காரணமாக நேற்று (மே 22) அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோது, அதிக மயக்க மருந்து கொடுத்ததால் அவர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தை அடுத்து, தவறான சிகிச்சையால் சீதாலட்சுமி உயிரிழந்ததாகக் குற்றம் சாட்டி உறவினர்களும், சக மாணவர்களும் அரசு மருத்துவமனை முன்பு சாலை மறியலில் ஈடுபட்டனர். மாணவியின் மரணம் தொடர்பாக சிறப்பு விசாரணை குழு அமைக்கப்படும் என அமைச்சர் ரமேஷ் மாணவிகளிடம் உறுதி அளித்துள்ளார். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஆழியாறு அரசு மீன் வளர்ச்சி கழகம் சார்பில் பொதுமக்களுக்கு மீன்கள் விற்பனை




கோவை மே: 24

தமிழ்நாடு அரசு மீன் வளர்ச்சி கழகம், ஆழியாறு சார்பில் விற்பனை சிறப்பாக நடைபெற்று வருகிறது. திங்கள் முதல் ஞாயிறு வரை காலை 8 மணி முதல்10 வரை விற்பனை நடைபெற்று வருகிறது.

இது பற்றிய விற்பனையாளர் கூறியதாவது: ஆழியாறு நீர் பிடிப்பு பகுதிகளில் இயற்கையாக வளர்க்கப்பட்ட மீன்கள் இங்கே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக ஜிலேபி, கட்லா, ரோகு, மிருகால் போன்ற மீன் வகைகள் இங்கே விற்பனை செய்யப்பட்டு வருகிறது மேலும் வரும் காலங்களில் பொதுமக்களின் தேவைக்கேற்ப அதிகமாக மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் எனக் கூறினார்.

திருப்பூரில்

# ம.தி.மு.க கவுன்சிலர்கள் உட்பட 125 நிர்வாகிகள் விலகி 'தவெக'வில் இணைந்தனர்



திருப்பூர், மே. 24

திருப்பூர் மாநகர் மாவட்ட ம.தி.மு.கவில் அதிரடி திருப்பமாக, முக்கிய நிர்வாகிகள் மற்றும் கவுன்சிலர்கள் உட்பட 125 பேர் ஒரே நேரத்தில் கட்சியில் இருந்து விலகி, தமிழக வெற்றிக் கழகத்தில் (தவெக) இணைந்துள்ளது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர் மாநகர் மாவட்ட ம.தி.மு.க செயலாளரும், கவுன்சிலருமான நாகராஜ் தலைமையில், மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் மற்றும் கவுன்சிலர்களான குமார், வசந்தாமணி உள்ளிட்ட 125 பேர் ம.தி.மு.கவிலிருந்து விலக முடிவெடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து, அவர்கள் அனைவரும் கோபிசெட்டிபாளையத்தில் தவெக மாநில நிர்வாகி அமைச்சர் செங்கோட்டையனை சந்தித்து தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் அதிகாரப்பூர்வமாக இணைத்துக் கொண்டனர்.

இந்த இணைப்பின் மிக முக்கிய அம்சமாக, திருப்பூர் மாநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அணி நிர்வாகிகள், அவைத் தலைவர்கள் மற்றும் கிளைச் செயலாளர்கள் என அடிமட்டத் தொண்டர்கள் முதல் உயர்நிர்வாகிகள் வரை அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் ம.தி.மு.கவிலிருந்து விலகியுள்ளனர். ஒரே மாவட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகளும், கிளைச் செயலாளர்களும் மொத்தமாக மாற்றுக்கட்சிக்கு மாறுவது என்பது அந்தப் பகுதியில் ம.தி.மு.கவிற்கு விழுந்த பலத்த அடியாகவே பார்க்கப்படுகிறது

தேர்தல் களம் சூடுபிடித்துள்ள வேளையில், திருப்பூரில் ம.தி.மு.கவின் முக்கிய தூண்களாகக்கருதப்பட்ட மாநகர்மாவட்ட செயலாளர் நாகராஜ் மற்றும் கவுன்சிலர்களும், நிர்வாகிகளும் கூட்டமாக விலகி விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்திருப்பது, திருப்பூர் மாவட்ட ம.தி.மு.க தலைமைக்கும் தொண்டர்களுக்கும் இடையே பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த அதிரடி அரசியல் மாற்றம் காரணமாக திருப்பூரில் தவெகவின் பலம் பன்மடங்கு அதிகரித்துள்ளதாக அக்கட்சியினர் உற்சாகமடைந்துள்ளனர்.



ஆம்பூர் கிருஷ்ணாபுரம் காளியம்மன் கோவில் வீதியில் வைகாசி மாத வளர்பிறை சஷ்டி நாளை முன்னிட்டு

# 1500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர்

ஆம்பூர், மே.24,

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் கிருஷ்ணாபுரம் காளியம்மன் கோவில் வீதியில் வைகாசி மாத வளர்பிறை சஷ்டி நன்னாளை முன்னிட்டு இ.கே.சேகர் குடும்பத்தினர் சார்பாக 1500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு மகா அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த அன்னதான நிகழ்ச்சி ஸ்ரீ சூரசம்ஹார மூர்த்தியின் அருளுடனும், அனைவரின் நினைவில் வாழும் வி.தாமோதரன் நினைவில் நடைபெற்றது.

விழாவை 17வது வார்டு நகர மன்ற உறுப்பினர் டி.சத்யா தொடங்கி வைத்தார். இதில் ஸ்ரீ எல்லையம்மன் ஆலய திருப்பணி தொண்டர்களான டகார்த்திகேயன், வெங்கடேசன், கேசவன், குப்புசாமி, ஏ. கோவிந்தன், சண்முகம் மேஸ்திரி, ராஜிவேலு, கணேசன், பூபதி, விமல்நாதன் ஆசிரியர், தரணி அட்வகேட், ராஜேந்திரன், மகி மேஸ்திரி, பாஸ்கர், கே.சதீஷ், கே.கோபி, முனிராஜ், குடும்பத்தினர், எஸ்.ராகவன், விஜி, வி.டி.எம். ஸ்டோர் ஊழியர்கள் மற்றும் வேல்முருகன் குழுமத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மேலும் அன்னதான விழா ஏற்பாடுகளை இ.கே.எஸ்.பழனி, சத்யா, தீபிகா, அப்பகுதி மக்கள் மற்றும் திருச்செந்தூர் முருக பக்தர்கள் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.

# தருமபுரி பழைய புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து மீண்டும் ஒகேனக்கல் பேருந்துகள் இயக்கம்




தருமபுரி மே 24

தருமபுரி ராஜகோபால் கவுண்டர் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து மீண்டும் ஒகேனக்கல் செல்லும் அனைத்து அரசு மற்றும் தனியார் பேருந்துகள் பொதுமக்கள் நலனை கருதி பழைய புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து நான்கு ரோடு, புதிய பேருந்து நிலையம் வழியாக ஒகேனக்கல் செல்கிறது. இதேபோல் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளுக்கு செல்லும் அனைத்து அரசு, தனியார் பேருந்துகளும் மீண்டும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படுகிறது. புறநகர பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் இயக்கப்படுவதை யொட்டி பேருந்து நிலைய வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணத்தில்

# தமிழக வெற்றி கழத்தின் சார்பில் நடைப்பெறும் மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டி

## காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர் துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, மே. 24

தமிழக முதல்வரக ஜோசப் விஜய் பதவி ஏற்றுள்ளதை கொண்டாடும் விதமாக கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் தவெக ஒன்றிய கழகத்தின் சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைப்பெற்றது,

காவேரிபட்டினம் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் துவங்கிய இத்த கிரிக்கெட்போ ட்டியில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், போத்தாபுரம், தளிஹள்ளி, நரிமேடு, பையூர், ஜெகதாப், ஹாள்வேஹாள்ளி, திம்மாபுரம் என மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து 28 அணிகள் கலந்தக் கொண்டனர். காவேரிப் பட்டினம் தவெக ஒன்றிய செயலாளர் விஜய் குமார், மாவட்ட மருத்துவமனை அமைப்பாளர் பார்த்திபன் ஆகியோர் தலைமையில் நடைப்பெற்ற இந்தகிரிக்கெட் போட்டியைகிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் பொதுக் குழுஉறுப்பினருமானஎல்,சுப்பிரமணியன் சிறப்புஅழைப்பாளராககலந்துக்கொண்டு போட்டியை துவக்கி வைத்தார்.

இதனையடுத்து காவேரிப்பட்டினம், ஜெகதாப், பையூர், ஹால்வே ஹள்ளி உள்ளிட்ட பல்வேறு அணிகள் ஆர்வத்துடன் விளையாடி வருகின்றனர் மூன்று நாள்கள் நடைப்பெற உள்ள இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களை பிடித்து வெற்றிப் பொறும் அணிகளுக்கு பரிசு தொகை மற்றும் கேடயத்தினை எல். சுப்பரமணியன் வழங்கி கௌரவிக்க உள்ளார். தவெக தலைவர் ஜேசப் விஜய் தமிழக முதல்வராக பதவி ஏற்றதை சிறப்பிக்கும் விதமாக நடைப்பெற்ற இந்த கிரிக்கெட் போட்டியில் முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் வந்து உறுப்பினர் முத்து, முன்னாள் நகர தலைவர் தக்காளி தவமணி, காங்கிரஸ் கட்சியின் விவசாய பிரிவு மாவட்ட தலைவர் ராமச்சந்திரன், கலைப் பிரிவு துணைத் தலைவர் தேவேந்திரன், மற்றும் தவெக கட்சி சேர்ந்த ஒன்றிய துணை செயலாளர் உதயகுமார், ஒன்றிய இணைச் செயலாளர் பச்சையப்பா, நகர இளைஞர் அணி செயலாளர் அப்துல் ரஷீக், நகர செயற்குழு உறுப்பினர் அருண் குமார் கே.வி.எஸ். சாந்தகுமார்,உதயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# வயதான மூதாட்டியை மோதிய இருசக்கர வாகனம்

## நிற்காமல் சென்றவரை தேடி வரும் போலீசார்

சுசீந்திரம், மே. 24

சுசீந்திரம் அருகே உள்ள பறக்கை தெற்கு தெருவை சார்ந்தவர் குமாரசாமி72 இவர் பறக்கை பகுதியில் டெய்லர் கடை நடத்தி வருகிறார் சம்பவத்தன்று இவரது மனைவி ஆச்சியம்மாள் 71 தனது கணவருக்கு சாப்பாடு கொடுத்து விட்டு வீட்டிற்கு செல்வதற்காக ரோட்டோரம்சாலையை கடக்கமுயலும் பொழுது நாகர்கோவிலில் இருந்து தெங்கம்புதூருக்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகவந்தநபர் மூதாட்டியை இடித்துதள்ளியதில்தூக்கிவீசப்பட்டமூதாட்டியின் வலது கால் முறிந்தது படுகாயம் அடைந்து ரோட்டில் கிடந்த போதும் கண்டு கொள்ளாமல் இரு சக்கரத்தில் வந்த நபர் அங்கிருந்து தப்பித்து சென்று விட்டார் அக்கம் பக்கத்தினர் மூதாட்டியை ஆசிரமம்பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் மூலம் சேர்த்தனர் மூதாட்டி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் இது குறித்து ஆச்சியம்மாளின் கணவர் குமாரசாமி சுசிந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் சுசிந்திரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து மூதாட்டியைஇடித்து விட்டு தப்பி சென்ற மர்ம நபரை தேடி வருகின்றனர்

திருவள்ளூர்:


# மின்கம்பத்தில் மோட்டார் சைக்கிள் மோதல்; தந்தை, மகன் பலி

திருவள்ளூர், மே. 24

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் கக்கன்ஜி காலனி 3வது தெருவை சேர்ந்தவர் சதீஷ் (வயது 34). கொத்தனார். இவருக்கு ரஞ்சனி (28) என்ற மனைவியும். சைலேஷ் (6), 9 மாத குழந்தை ஹரிஹரன் ஆகிய மகன்களும் உள்ளனர். இவர்களுடன் உறவுப்பெண் கீர்த்தனா (16) என்பவரும் வசித்து வந்தார். இந்நிலையில் செங்குன்றம் அடுத்த அலமாதியில் நடைபெற்ற உறவினர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு நேற்று முன்தினம் நள்ளிரவில் 5 பேரும் ஒரே மோட்டார் சைக்கிளில் மீஞ்சூருக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். சோழவரம் அருகே வந்தபோது திடீரென மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து சாலை ஓரத்தில் இருந்த மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் தலையில் பலத்த காயமடைந்தசதீஷ்மற்றும்அவரதுமகன்சைலேஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ரஞ்சனி, குழந்தை ஹரிஹரன் மற்றும் கீர்த்தனா ஆகிய 3 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்த சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற செங்குன்றம் போக்குவரத்து போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

உயிரிழந்த தந்தைமகன் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த விபத்து குறித்து செங்குன்றம் போக்குவரத்து போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர்.

# கற்பூரத்தில் ஏற்றிய தீ சேலையில் பரவி மூதாட்டி உயிரிழப்பு



சென்னை, மே. 24

சென்னை புழலை அடுத்த காவங்கரை மாரியம்மன் நகரை சேர்ந்தவர் செண்பகவள்ளி (68 வயது). இவரது மகன் துபாயிலும், மகள் திருவள்ளூரிலும் வசித்து வருகின்றனர். செண்பகவள்ளி மட்டும் தனியாக வசித்து வந்தார். தாய் வீட்டில் தனியே வசிப்பதால், அவரை கவனித்துக்கொள்ள வீட்டில் கண்காணிப்பு கேமராவை மகன் பொருத்தி இருந்தார். மேலும், அடிக்கடி வீடியோ காலில் தாயிடம் பேசி வந்துள்ளார்.

இந்தநிலையில், துபாயில் உள்ள செண்பகவள்ளியில் மகன், கண்காணிப்பு கேமராவில் பதிவானகாட்சிகளை செல்போன் வழியாக கண்காணித்தபோது, தாய் வீட்டில் புகைமூட்டமாக தெரிவதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக, அருகில் உள்ள வீட்டில் உள்ளவர்களை தொடர்பு கொண்டு விவரத்தை தெரிவித்தார்.

அவர்கள் ஓடிச்சென்று பார்த்தபோது, வீடு முழுவதும் புகை மண்டலமாக இருந்தது. கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, செண்பகவள்ளி தீக்காயங்களுடன் விழுந்து கிடந்தார். பூஜை அறையில் கற்பூரத்தில் ஏற்றிய தீ, அவருடைய சேலையில் பிடித்து, அதன்மூலம் தீக்காயம் அடைந்து மயங்கிகிடந்துள்ளார்.

உடனடியாக, அவரை அருகில் உள்ள மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கனவே மூதாட்டி மூச்சுத் திணறி இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து, வழக்குப்பதிவு செய்துள்ள புழல் போலீசார், மூதாட்டியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

## நாகையில் நடைபெற்ற மாநில அளவிலான நீச்சல் போட்டி

# எஸ்ஆர்எம் பல்கலைக்கழக மாணவர்கள் முதலிடம் பெற்றனர்




நாகப்பட்டினம், மே 24

நாகையில் நடைபெற்ற மாநில அளவிலான நீச்சல் போட்டியில் எஸ்ஆர்எம் பல்கலைக்கழக மாணவர்கள் முதலிடம் பெற்றனர்.

மாநில அளவிலான அக்வாட்டிக் சாம்பியன்ஷிப் நீச்சல் போட்டிகள் நாகை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் உள்ள நீச்சல்குளத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் தமிழகம் முழுவதும் இருந்து கல்லூரிகள், நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு விடுதி மாணவர்கள் என 170}க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கேற்றனர். இதில் பிரீ ஸ்டைல், பேக் ஸ்டைல், பிரெஸ்ட் ஸ்டைல் பட்டர்பிளை, ரிலே ஆகிய 5 பிரிவுகளில் நீச்சல் போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளின் முடிவில் அனைத்துப் பிரிவுகளிலும் முதலிடம் பெற்று ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தை சென்னை எஸ்ஆர்எம் பல்கலைக்கழக அணி பெற்றது. திருச்சி விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி இரண்டாமிடத்தையும், காஞ்சிபுரம் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மூன்றாமிடத்தையும் பெற்றது.

மேலும் தனிநபர் சாம்பியன்ஷிப் போட்டிகளில், சென்னை எஸ்ஆர்எம் பல்கலைக்கழக மாணவர் சரண் கர்ணன் முதலிடமும், பெண்கள் பிரிவில் சென்னை எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்தசாஷ்மிதாமுதலிடமும் பெற்றனர். மேலும் அதிவேக நீச்சல் வீரர்களாக எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த சரண், சபரிகிரீசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். போட்டிகளில் வெற்றி பெற்ற அணி மற்றும் வீரர்களுக்கு வெற்றிக்கோப்பைகள் மற்றும் கேடயங்கள் பரிசாக வழங்கப்பட்டன.



## நாகர்கோவில் மாநகராட்சி

# தூய்மை இந்தியா திட்டத்தின் தூய்மை திருவிழா; உறுதி மொழி ஏற்பு

நாகர்கோவில்,மே. 24

நாகர்கோவில் மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை திருவிழா நேற்று 9வது வார்டுக்குட்பட்ட கிருஷ்ணன் கோவில் பகுதியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு (பொ) மேயர் மேரி பிரின்சி லதா தலைமையில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திடக்கழிவு மேலாண்மை புதிய விதிகளின் படி 2026ன் படி வீட்டு கழிவுகளை நான்கு பகுதிகளாக பிரிக்கும் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள், சுகாதார கழிவுகள், அபாயகரமான குப்பைகள் என தரம் பிரித்து மாநகராட்சி தூய்மை பணியாளர்களிடம் கொடுப்பதற்கான பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பொதுமக்கள ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தொடரந்து குப்பை இல்லா, தூய்மையான, நலமான நாகர்கோவில் மாநகரை உருவாக்க பொதுமக்கள் மற்றும் அதிகாரிகள் இணைந்து அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் உதவி ஆணையர் (வருவாய்) சுதா , மாநகர நல அலுவலர் டாக். சரோஜா, பொறியாளர் ரகுராம் , மாநகர திட்டமிடுநர் ஜாய், மாநகர வடக்கு மண்டல தலைவர் ஜவஹர், மாமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன், சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருமணமான பெண்ணுடன் அடிக்கடி வந்து உல்லாசம்

## கள்ளக்காதலில் ஈடுபட்ட வாலிபருக்கு நேர்ந்த கதி

செங்கல்பட்டு, மே.24

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே கள்ளக்காதல்விவகாரத்தில்வாலிபர்ஒருவர்கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்த சம்பவம் வருமாறு:

மதுராந்தகம் அருகே உள்ள சூனாம்பேட்டை அடுத்துள்ள தாமரைக்கேணி கிராமத்தை சேர்ந்தவர் மணி. இவரது மகன் விஜய். 30 வயதான இவர் கட்டிட வேலை செய்து வந்தார். இந்தநிலையில், அதே ஊரை சேர்ந்ததிருமணமானபெண்ணுடன்விஜய்க்குபழக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த பெண்ணின் கணவர் இல்லாத நேரத்தில் அடிக்கடி விஜய் வீட்டுக்கு சென்று தனிமையில் உல்லாசமாக இருந்துள்ளார்.

இது அந்த பெண்ணின் தந்தையான தேவராஜிக்கு பிடிக்கவில்லை என கூறப்படுகிறது. 68 வயதான அவர் விஜயை அழைத்து கண்டித்துள்ளார்.இருப்பினும் விஜய் தான் விரும்பிய பெண்ணுடன் கள்ளக்காதலை தொடர்ந்து உள்ளார். இந்தநிலையில், வீட்டில் இருந்து விஜய்திடீரெனமாயமானார்.இதைதொடர்ந்துஅவரது குடும்பத்தினர் அக்கம் பக்கத்தில் தேடி பாத்தனர்.

அப்போது தாமரைக்கேணி கிராமத்தில் ஒரு தோப்பு அருகில் காலில் வெட்டு காயத்துடன் விஜய் இறந்துகிடந்தது தெரிய வந்தது. இதுபற்றி தகவல் தெரிந்ததும் சூனாம்பேடு போலீசார் விரைந்து சென்று விஜய்யின் உடலை மீட்டு விசாரணை நடத்தினார்கள். அக்கம் பக்கத்தில் போலீசார் நடத்திய விசாரணையில் விஜய்யின் கள்ளக்காதல் விவகாரம் தெரிய வந்தது.

இதை தொடர்ந்து விஜய்யுடன் கள்ளக்காதலில் ஈடுபட்ட பெண்ணின் தந்தை தேவராஜை பிடித்து போலீசார் விசாரணை நடஹ்தினார்கள். அப்போது அவர் விஜய்யை தனது 17 வயது பேரனான பள்ளி மாணவருடன் சேர்ந்து கொடூரமாக கொலை செய்து இருக்கும் அதிர்ச்சி தகவல் தெரிய வந்தது.

விஜய் கள்ளக்காதலியின் வீட்டுக்கு சென்று விட்டு இரவில் தனது வீட்டுக்கு சென்றுள்ளார். அப்போது தேவராஜ் தனது பேரனுடன் பின் தொடர்ந்து சென்று அரிவாளால் காலில் வெட்டினார். இதில் விஜய் துடிதுடித்து கீழே விழுந்தார். காலில் வெட்டு காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தோடியதால் அங்கிருநுது அவரால் தப்பி செல்ல முடியவில்லை. இந்த நேரத்தில் தேராஜும் அவரது பேரனும் சேர்ந்து தாங்கள் மறைத்து வைத்திருந்த விஷத்தை எடுத்து விஜய் வாயில் ஊற்றினார்கள் .

ஏற்கனவே காலில் வெட்டு காயம் ஏற்பட்டு ரத்தம் வெளியேறிய நிலையில் உடலில் விஷமும் கலந்ததால் சம்பவ இடத்திலேயேதுடிதுடித்து விஜய் உயிரிழந்தார். பின்னர்எதுவும்தெரியாதது போலதேவராஜும்அவரடு 17 வயது பேரனும் ஊருக்குள் சுற்றி திரிந்தது தெரிய வந்தது. தேவராஜ் கொடுத்த தகவலின் பேரில் பேரனையும் போலீசார் கைது செய்தனர். கைதான இருவரும் கோர்டில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களில் தேவராஜ் சிறையில் அடைக்கபப்ட்டார். 17 வயது சிறுவன் தற்போது பிளஸ் 1 முடித்து உள்ளார். அவர் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் அடைக்கப்பட்டார். இந்தசம்பவத்தில்தொடர்பாக17வயதுசிறுவனிடமும் போலீசார் விசாரணை நடத்தினார்கள். அப்போது அவன்தாத்தாவுடன்சேர்ந்துதாயுடன்தவறானஉறவில் இருந்த விஜய்யை தீர்த்து கட்டியதாக திடுக்கிடும் தகவலையும் தெரிவித்துள்ளான்.

கள்ளக்காதல் விவகாரத்தில் 17 வயது சிறுவன் தாத்தாவுடன் சேர்ந்து தீர்த்து கட்டிய சம்பவம் மதுராந்தகம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## விஜய் அண்ணாவிடம் இதை சொல்லுங்கள்

# மெரினாவில் மாயமான மாணவனின் தாயின் கண்ணீர் கோரிக்கை

சென்னை, மே. 24

மெரினா கடலில் மூழ்கி உயிரிழந்த பதினோராம் வகுப்பு படிக்கும் சுதர்சன் என்ற மாணவனின் உடல் இரண்டு நாளாகியும் கிடைக்காத நிலையில் உயிரிழந்த சிறுவனின் தாய் தேவகி மெரினா கடற்கரையில் ஊடகங்களுக்கு கண்ணீர் மல்க பேட்டி

தேர்தலில் விஜய் அண்ணாவுக்கு ஓட்டு போடுங்கள் என்று என் மகன் என்னிடம் சொன்னான் நானும் விஜய் அண்ணாவுக்கு தான் ஓட்டு போட்டேன் தயவு செய்து அவரிடம் யாராவது சொல்லி என் மகனை மீட்டு கொடுக்க சொல்லுங்கள் என அந்த தாய் கதறல்

எனக்கு யாரிடம் சென்று இதை கேட்க வேண்டும் என தெரியவில்லை தயவு செய்து யாராவது இதை விஜய் அண்ணாவிடம் தெரியப்படுத்துங்கள் எனவும் அவர் கண்ணீருடன் கோரிக்கை. சமூக வலைத்தளங்களில் இந்த செய்தி வேகமாக பரவி வரும் நிலையில், பாதிக்கப்பட்ட தாய்க்கு உதவ த.வெ.க நிர்வாகிகள் உடனடியாக களமிறங்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அவிநாசி

# சட்டமன்ற பொதுத்தேர்தலில் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி: எல்.முருகன்

கோவை, மே. 24

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணைமந்திரி எல்.முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

கோவைவடக்குமாவட்டம்அவிநாசிசட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தெக்கலூர், புதுப்பாளையம், நம்பியாம்பாளையம் கிராமங்களில் உள்ள பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகளின் இல்லத்திற்கு சென்று சந்தித்து கலந்துரையாடினேன்.

கடந்த மாதம் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலில் பணியாற்றியதற்காக அவர்களுக்குஎனதுஇதயம்கனிந்தநன்றிகளையும் வாழ்த்துகளையும் பரிமாறி கொண்டேன்.

மற்றொருஎக்ஸ்தளபதிவில்கூறியிருப்பதாவது:

கோவை வடக்கு மாவட்டம் அவிநாசி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட தண்ணீர்பந்தம்பாளையம் பகுதியில் கைத்தறி நெசவு தொழில் செய்து வரும் சகோதரர் தமிழ் அன்புவை சந்தித்து கலந்துரையாடினேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்








## கோவையில்

# 10 வயது சிறுமி கொலை வழக்கில் குற்றவாளி கைது

கோவை மே:24

கடந்த 21.05.2026 அன்று இரவு சுமார் 08.30 மணி அளவில்,கோவை மாவட்டம் சூலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பள்ளபாளையம்,பாரதிபுரம்,அருணகிரிநாதர் வீதியில் வீட்டின் வெளியே விளையாடிக் கொண்டிருந்த 10 வயது சிறுமி மாலை சுமார் 05.00 மணி அளவில் காணாமல் போனதாக காவல் அவசர உதவி எண் 100மூலம்தகவல்கிடைக்கப்பெற்றது. தகவல் கிடைத்தவுடன்காவல்துறையினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டு,புகார் பெற்று அதே இரவு சுமார் 10.00 மணியளவில் குழந்தை காணாமல் போனது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கருமத்தம்பட்டி உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் மேற்பார்வையில் ஐந்து தனிப்படைகள் அமைக்கப்பட்டு,காணாமல் போன சிறுமியை தேடும் பணி தீவிரப்படுத்தப்ப ட்டது. விசாரணையின் போது சிசிடிவி காட்சிகள் மற்றும் தொழில்நுட்ப

ஆதாரங்கள் ஆய்வு செய்யப்பட்டதில்,நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த கார்த்தி (33),த/பெ.காசிநாதன் சிறுமியின் குடும்பத்திற்கு பழக்கமான அண்டை வீட்டுக்காரர் சிறுமியை அழைத்துச் சென்றது உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து,கண்ணம்பாளையம் பகுதியில் உள்ள மரியா ரோஸ் கார்டன் அடுக்குமாடி குடியிருப்பின் முதல் மாடியில் பதுங்கியிருந்த குற்றவாளி கார்த்தியை காவல்துறையினர் சுற்றிவளைத்தனர்.அப்போது காவல் துறையினரிடமிருந்துதப்பிக்கமுயன்ற அவர் மேல்மாடியில் இருந்து குதித்ததில்,அவரது வலது கை மற்றும் வலது காலில் முறிவு ஏற்பட்டது.பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

விசாரணையில், குற்றவாளி கார்த்தி,சிறுமியை ஆசைவார்த்தை கூறி ஏமாற்றி அழைத்துச்சென்று பாலியல் வன்கொடுமை செய்து,பின்னர் கண்ணம்பாளையம் குளம் அருகிலுள்ள தென்னைத் தோட்டத்தில் கழுத்தை நெரித்து கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்.

மேலும் நடைபெற்ற விசாரணையில்,பாரதிபுரம்,பள்ளபாளையத்தை சேர்ந்த மோகன்(30),த/பெ.ராமசாமி என்பவர்,முக்கிய குற்றவாளிக்கு உறுதுணையாக இருந்தது தெரியவந்தது. இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார்.

கைது செய்யப்பட்ட கார்த்தி தற்போது கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.இவ்வழக்கு சிறுமி மீதான பாலியல் வன்கொடுமை கொடர்புடையது என்பதால்,வழக்கில் போக்சோ சட்டப்பிரிவுகள் சேர்க்கப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

முதல்தகவல்கிடைத்தவுடன்காவல் துறையினர் மேற்கொண்ட துரிதமான நடவடிக்கை மற்றும் காவல்துறையின் தயார்நிலை காரணமாக,24 மணி நேரத்திற்குள் வழக்கு கண்டறியப்பட்டு வழக்கின் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.மேலும்,பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு விரைவாக அரசின்நிவாரணஉதவித்தொகைகிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## நாகர்கோவில் மாநகராட்சியில்

# நிறைவடையாத அம்ருத் குடிநீர் திட்டம் (பொ) மேயர் நடவடிக்கை எடுப்பார்களா?

## பொதுமக்கள் எதிர்பார்ப்பு!!

நாகர்கோவில், மே.24

நாகர்கோவில் மாநகராட்சியில் நிறைவடையாத அம்ருத் குடிநீர் திட்டம் பொறுப்பு மேயர் மேரி பிரின்ஸி லதா நடவடிக்கை எடுப்பார்களா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு

நாகர்கோவில் மாநகராட்சி 6வது வார்டு பள்ளிவிளை அடுத்த சானல் கரை பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு உள்ள வீடுகளுக்கு அம்ருத் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய்கள் இதுவரை வழங்கவில்லை. இதனால் அப்பகுதி மக்களுக்கு பழைய இணைப்பு மூலம் 10 முதல் 15 நாள்களுக்கு ஒரு முறையே குடிநீர் வழங்கப்படுகிறது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். பல வீடுகளில் எந்த குடிநீர் இணைப்புகளும் இல்லாமல் மக்கள் தெரு குழாயில் வரும் குடிநீரை நம்பி வாழ்கின்றனர். இந்நிலையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு குடிநீர் குழாய் பதிக்க தொடக்கப்பட்ட பணிகளை பாதியில் நிறுத்தி சென்றுள்ளனர்.

தமிழக அரசு ரூ.251.43 கோடியில் புத்தன் அணை அம்ருத் குடிநீர் திட்டத்தை செயல்படுத்தி நாகர்கோவில் மாநகர பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் வழங்கி நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படும் என தெரிவித்திருந்த நிலையில் இதுவரை பல வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்காமல் இருப்பதால் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

நாகர்கோவில்மாநகராட்சிநிர்வாகம் அம்ருத் குடிநீர் திட்டத்தில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படாத பகுதிகளுக்கு உடனடியாக இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.